www.tamilarangam.net


# EELAM PEOPLES' INFORMATION CENTRE

## ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்

★EPIC

B.M. BOX - 1738.
LONDON. WC1N. 3XX.
U.K.

POST BAG 5551
MADRAS - 600 094.
INDIA.

E P I C (BRANCH)
Daxelhoferstr. 9
3012 Bern
Switzerland


ஈழத்தமிழர்களுக்கு சிறிலங்கா இனவெறி அரசினால் இழைக்கப்படும் துன்புறுத்தல்களையும் எமது விடுதலைப்போராட்டங்களையும் உலக ரீதியில் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டுவரும் "ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின்" (EPIC) கிளை ஸ்தாபனம் ஒன்றினை சுவிற்சலாந்தின் தலைநகரான பேர்ணில் (BERN) ஸ்தாபித்துள்ளோம் என்பதை சுவிஸ் வாழ் ஈழத் தமிழர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். எமது இஸ்தாபனமானது ஈழத்தில் நிகழும் உண்மைச் சம்பவங்களை நடுநிலைப் பாட்டுடன் 'ஈழச்செய்தி' 'EELAM NEWS' எனும் பத்திரிகையினை மாதமொருமுறை தமிழிலும், ஆங்கிலத்திலும் இலவசமாக வெளியிட்டு வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே [எமது வெளியீடுகளை பெற விரும்பும் அன்பர்கள் எமது ஸ்தாபனத்துடன் தொடர்புகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்]

மேற்படி பணியினைத் தொடர்ந்துவருகின்ற நாம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் பாரிய கண்காட்சி ஒன்றினை BERN நகரில் நடாத்தவுள்ளோம். இக்கண்காட்சியினூடாக ஈழத் தமிழ் மக்களின் சரித்திரங்களும் அவர்களுக்கு சிறிலங்கா இனவெறி அரசினால் இழைக்கப்படும் துன்புறுத்தல்களும், உரிமைமறுப்புக்களும், புகைப்படங்கள், பத்திரிகைச் செய்திகள், சுவரொட்டிப் பிரசுரங்கள், சிலைட், வீடியோ காட்சிகள் மூலமாக சுவிஸ் வாழ் மக்களுக்கு வெளிப்படுத்துவதன் மூலம் உலக மக்களுக்கு தெரியச் செய்யவுள்ளோம்.

இக்கண்காட்சியினை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு இயக்கசார்பற்ற முறையில் அனைத்து சுவிஸ் வாழ் ஈழத் தமிழர்களையும் ஒத்துழைக்கும் வண்ணம் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆதரவினை எதிர்பார்க்கும்,
ஈ.ம.செ. நிலையத்தினர் (சுவிஸ் கிளை)

குறிப்பு:- கண்காட்சிக்கு வேண்டிய உங்களால் இயன்ற ஆக்கங்களை தந்துதவுவதற்கான முடிவு திகதி 31-01-1985.

நன்றி.

★ வெல்க! மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம் ★

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்